**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**S.C. NO.159/2019**

**09.11.2023 - அ.சா. 4 நிஜாந்தி சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரில் குறிப்பிட்டு என்னென்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். என்னுடைய முதல் விசாரணையில் என்னை அடித்து விட்டதாகவும், அதனை என் அப்பா கேட்க வந்தார் என்ற விவரம் புகாரில் உள்ளது. கலப்பை பொதுவான கலப்பை. கலப்பையை வீட்டில் வைக்கும் போது நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன விவரத்தை நான் போலீசாரிடம் சொன்னேன். என் அப்பா நிலத்தருகே இருந்த போது நான் உடன் இருந்தேன். அந்த விவரத்தையும் போலீசாரிடம் தெரிவித்தேன்.

என்னை அடித்தது சம்மந்தமாக என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ளேன் அது சம்மந்தமாக நான் ஆஸ்பத்திரிக்கு சென்று சிகிச்சை மேற்கொண்டேன். போலீசார் வாக்குமூலத்தை கணிணி தட்டச்சு மூலம் தயாரித்து என்னிடம் கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் நான் இருந்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் என்ன விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், உண்மையிலேயே சம்பவ இடத்தில் இருந்து இருந்தால் முறன்பட்டு சாட்சியம் அளித்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல.

சண்டையால் என் தகப்பனார் இறக்கவில்லை என்றும், கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தால் இறந்து விட்டார் என்றும், எதிரியின் மீது பொய்யான ஒரு புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சண்டை நடந்த 1/2 மணி நேரம் கழித்து என் தகப்பனாரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவருடைய இறப்பிற்கு எதிரி காரணமாக இருந்திருந்தால் 1/2 மணி நேரத்தில் இறப்பு ஏற்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. அப்படியே மரணம் ஏற்பட்டு இருந்தால் மூளைச்சாவு தான் ஏற்பட்டு இறந்திருக்க வேண்டும், வேறு எந்த வகையிலும் அவர் இறக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் சம்பவத்தால் இறக்க வில்லை என்றும், அவர் முன் கூட்டியே இறந்து விட்டார் என்றால் சரியல்ல. அதனால் தான்

மருத்துவர் ஏற்கனவே என் தகப்பனார் இறந்து விட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

ஒம்/- நிஷாந்தி

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.